**மாண்புமிகு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நீதிமன்றம், இராமநாதபுரம்**

முன்னிலை – திரு. அ. ஆதியான், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, இராமநாதபுரம்.
2026 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**Crl.M.P No. 367/2026**
**in**
**S.T.C No.48/2016**

ஐயப்பன் .... மனுதாரர்/எதிரி

/// எதிர் ///

சுகுமாரன் .... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

இம்மனுவானது கடந்த 10.04.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆர்.அஜய்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. என். மாதவன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

பு.த.சா.1 சாட்சியை மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்க வேண்டி கு.வி.மு.ச. பிரிவு 311 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A AATHIYAN
Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.26 12:14:45 +0530

**02) மனுவின் சுருக்கம் –**

மனுதாரர் மேற்படி வழக்கில் எதிரி ஆவார். இந்த வழக்கானது பு.த.சா.1 சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக நிலுவையில் இருந்த நிலையில் கடந்த 27.03.2026 ம் தேதியன்று எதிரி தரப்பு வழக்கறிஞர் வெளியில் சென்றுவிட்டதால் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய இயலவில்லை எனவே பு.த.சா.1 சாட்சியின் குறுக்குவிசாரணை தொடர்ச்சி நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டது. எனவே புகார்தாரரை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கவில்லை எனில் எதிரிக்கு பெருத்த கஷ்டம், நஷ்டம் ஏற்படும். எனவே எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பு.த.சா.1 சாட்சியை மீண்டும் அழைக்குமாறு வேண்டி இம்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03) பதிலுரையின் சுருக்கம்–**

இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. இவ்வழக்கில் காலதாமம் ஏற்படுத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்/எதிரிக்கு கிடைக்கதக்கதல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**04) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய வினா யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா ? என்பதேயாகும்.**

**தீர்வு –**

**i)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் புகார்தாரர் கடந்த 21.10.2016 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் கடந்த 15.02.2017, 24.11.2017, 29.05.2024 ஆகிய தேதிகளில் மனுதாரர்/எதிரி தரப்பில் பு.த.சா.1 சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

A AATHIYAN
Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.26 12:14:56 +0530

மேலும், இந்த வழக்கில் பு.த.சா.1 சாட்சியின் குறுக்கு விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு சுமார் 61 முறை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்/எதிரி தரப்பில் சுமார் 10 வருடங்களாக பு.த.சா.1 சாட்சியின் குறுக்கு விசாரணைக்காக காலம் கடத்தி வந்ததாலும் மற்றும் கடந்த 27.03.2026ம் தேதியன்று பு.த.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினாலும், பு.த.சா.1 சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி கடந்த 27.03.2026ம் தேதியன்று முடித்து வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் கடந்த 10.04.2026ம் தேதியன்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**ii)** பு.த.சா.1 சாட்சியின் முதல் விசாரணை பதிவு செய்யப்பட்டு, அதன் பின்னர் 3 முறை எதிரி தரப்பில் பு.த.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்த பின்னரும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சுமார் 10 வருடங்களாக எதிரி தரப்பில் காலம் தாழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாறாக பு.த.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் இருந்தும் எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் M.Vellaisamy and another – Vs– The Inspector of Police, Central Crime Branch, Chennai. ( Reported in 2019 –2 – MWN– Cr– 171 ) என்ற வழக்கில்

" 5. *This case is only a sample of the manner in which the trial is being conducted in the subordinate Courts. Even though Section 309 of Cr.P.C. insists for a day–to–day trial, wherein the accused person is expected to cross–examine the witnesses on the same day they are examined in Chief, It is never followed. Time and again the Hon'ble Supreme Court has reiterated the position of law and in spite of the same, this Court encounters on a daily basis, petitions of this nature where the witnesses are sought to be recalled after long number of years, after they have deposed before the Court during Chief examination. On*

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.05.26 12:15:05 +0530

*the one hand it is true that fair trial must be ensured to the accused persons.* **That does not mean that the accused persons will examine witnesses on their own sweet will and pleasure and the accused persons cannot expect the Courts to wait for them to take a decision as to when they will cross-examine the witnesses.** *If this practice is encouraged, the proceedings are bound to get delayed and the trial Courts will be clogged with the pending cases.*

6. *On the one hand, this Court is insisting upon the trial Courts to dispose of long pending criminal cases and therefore, the trial Courts are getting strict while dealing with recall petitions. If such orders are interfered in a casual manner by this Court, in a way this Court will also be responsible for the pendency of the cases before the subordinate Courts.* **Therefore, this practice of treating petitions filed under Section 311 of Cr.P.C. in a casual manner and calling witnesses to the Court for cross-examination repeatedly should be stopped. As it is witnesses are hesitant to come before the Court and depose. If they are repeatedly called before the Court, at one stage no one will be ready to appear before the court as witness. " என்று தீர்ப்பளித்துள்ளது.**

iii) பரிசீலனைக்குட்பட்ட இவ்வழக்கில் பு.த.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணைய செய்ய எதிரிக்கு சுமார் 61 முறை வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதிலும் அவர் எவ்வித காரணமும் இன்றி பு.த.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துள்ளார். எனவே இவ்வழக்கை காலம் கடத்துவற்காக வேண்டி எதிரி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிரிமனுதாரர்/புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் பு.த.சா.1 சாட்சியை எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைக்கும் பட்சத்தில் பு.த.சா.1 சாட்சியை பலமுறை

A AATHIYAN
Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.26 12:15:15 +0530

நீதிமன்றத்தின் முன்பு வந்து சாட்சியம் அளிக்க வற்புறுத்தும் வகையில் அமையும் என்பதால் இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் கடந்த 27.03.2026 ம் தேதியன்று எதிரி தரப்பு வழக்கறிஞர் வெளியில் சென்றுவிட்டதால் குறுக்குவிசாரணை செய்ய இயலவில்லை என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை.

iv) எனவே இம்மனுவானது வழக்கை காலம் கடத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், சுமார் 10 வருடங்களாக சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்ததற்கு எதிரி தரப்பில் போதுமான காரணங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பதையும் பரிசீலனை செய்கையில் இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

v) முடிவில், இம்மனுவை முழுவதுமாக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் என் முன்பாக நேரடியாக நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு மே திங்கள் 26 ஆம் நாள், செவ்வய்க்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.26 12:15:23 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
இராமநாதபுரம்